வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 664 of 2025

வழக்கு சாட்சி - PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சந்திரலேகா | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கணவர் பெயர் | : | பாரதி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18.02.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 18.02.2026.**

1) நான் தற்போது காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு பரிட்சயம் வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.02.2022 ஆம் தேதி 17.00 மணிக்கு காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குழந்தைவேலு நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது ரவிக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய குற்ற எண் 44/2022 சட்டப்பிரிவு 392 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.ச.ஆ.11** ஆகும். வழக்கினை காவல் ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மாலை 17.30 மணிக்கு சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் பொன்னுசாமி மற்றும் நடராஜன் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். அந்த மாதிரி

வரைப்படம் **ஆ.த.சா.அ.12 ஆகும்.**

2)சாட்சிகள் ரவிக்குமார், பூபதி,சாந்தகுமார், கார்த்திக், நடராஜன் , பழனிச்சாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 13.02.2022 ஆம் தேதி காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்டியுடன் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்து சம்ந்தமாக புலன் விசாரணை செய்துக்கொண்டிருந்தபோது சம்பவத்தின்போது எதிரிகள் பயன்படுத்திய TN 66 AC 7356 Bajaj Pulsar என்ற இருசக்கர வாகனத்தையும் அதன் உரிமையாளர் இடத்தில் விசாரனை செய்தப்போது கோவை மாவட்டம் மேட்டுபாளையம் மத்தம்பாளையம் பகுதியை சேர்ந்த பாண்டியன் மகன் பவின்குமார் என தெரியவந்ததால் மேற்படி பகுதிக்கு சென்று PSC கார்டன் பகுதிக்கு சென்று காலை 7.00 மணிக்கு பவின் குமார் என்பவரை அவர் வீட்டின் அருகில் வைத்து விசாரணை செய்து முன்னுக்கு பின் முறனாக கூறியவர் தன் பெயர் பவின் குமார் என்று கூறினார்.

3)பின்னர் தொடர்ந்து விசாரணை செய்ததில் காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய குற்ற எண் 42/2022 சட்டப்பிரிவு 392 இதச மற்றும் 44/2022 சட்டப்பிரிவு 392 இதச வழக்குகளில் சம்மந்தப்பட்டிருப்பது தெரியவந்து அதே இடத்தில் வைத்து கைதிற்கான காரணம் கூறி 7.15 மணிக்குகைது செய்து அங்கிருந்த ஆஜர் சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் வழுப்புரான் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் படுத்திய திருட்டு சம்பவத்தின் போது பயன்படுத்திய TN 66 AC 7356 என்ற Bajaj Pulsar இருசக்கர வாகனத்தையும் கரசமடை பஸ் ஸ்டாப் அருகில் ஒரு நபரிடம் இருந்து பறித்த ½ பவுன் எடையுள்ள தங்க செயினை எடுத்து ஆஜர்படுத்தியதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார்.

4) பின்னர் 13.02.2022 ஆம் தேதி பகல் 13.15 மணிக்கு மேட்டுபாளையம் வேளாங்கணி

சாய்ராம் காலனி, எதிரியின் வீட்டில் வைத்து மாரீஸ்வரன் என்பவரை பிடித்து விசாரிக்க அவர் தான் திருடியதை ஒப்புக்கொண்டவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்து அங்கிருந்த ஆஜர் சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் வழுப்புரான் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவிநாசி, செங்கோடம்பாளையம் மற்றும் கரசமடை ஆகிய இடங்களில் நானும், சதீஷ் மற்றும் பவின்குமார் ஆகியோர் நகை பறித்த குற்றத்தை ஒப்புக்கொண்டு சதீஸ் என்பவர் நகை பறிக்க பயன்படுத்திய TN 40 F 6513 Super Splendor இரு சக்கர வாகனத்தை ஆஜர் படுத்தியும் என்னை கணபதி மகாலெட்சுமி பைனான்ச் கடைக்கு அழைத்து சென்றால் அங்கு அடகு வைத்த செங்கோடம்பாளையத்தில் பறித்த சுமார் 3 பவுன் எடையுள்ள கோதுமை மாடல் தங்க செயினை அடையாளம் காட்டி ஆஜர் படுத்துகிறேன் என்று கூறியதன் பேரில் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் கைப்பற்றப்பட்டது. எதிரி பவின் குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **ஆ.த.சா.அ. 13** ஆகும்.எதிரி மைலேஷ் என்கிற சதீஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **ஆ.த.சா.அ. 14** ஆகும்.எதிரி மாரீஸ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **ஆ.த.சா.அ. 15** ஆகும். கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே **ஆ.த.சா.அ. 16, 17 மற்றும் 18** ஆகும். சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் வழுப்புரான் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். அந்த படிவம் 91 **ஆ.த.சா.அ.19** ஆகும். இத்துடன் புலன் விசாரணை 24.02.2022 ஆம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 392 இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியங்கள் இல்லை என்றால் சரியல்ல. வழக்கானது எதிரி மீது சந்தேகத்தின் பேரில் போடப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த வித ஒப்புதல் வாக்குமூல் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.02.18 19:01:54 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.